திருவள்ளுவராண்டு 2054
2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்
மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு


தலைமை ஆசிரியர்

**முனைவர் அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
மின்னஞ்சல்: director@utsmdu.org

ஆசிரியர் குழு (இந்தியா)

**முனைவர் வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: iits@tn.nic.in

**முனைவர் கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drarangapari@gmail.com

**முனைவர் வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drramarajapandian@gmail.com

**முனைவர் தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
மின்னஞ்சல்: dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com

ஆசிரியர் குழு (அயலகம்)

**திரு ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு இலக்கிய ஆலோசகர், ஆசுதிரேலியா.
மின்னஞ்சல்: jeyaramiyer@yahoo.com.au

**முனைவர் சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல்: s.lingkumaran@gmail.com

**முனைவர் இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல்: prabu0111@gmail.com

**முனைவர் வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
மின்னஞ்சல்: jeevakumaran5@gmail.com

**முனைவர் ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
மின்னஞ்சல்: sivakumaran.r@nie.edu.sg

**செய்தி ஆசிரியர்**

**முனைவர் சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை



**தொடர்புக்கு**

0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**முகவரி**

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020




# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | முனைவர் கு.கவிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | முனைவர் ச. முருகேசன் | 128 |

# தமிழ்கூறும் ‘மதுரைகள்’



**முனைவர் பி. ஆறுமுகம்**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரி,
மதுரை – 625001.
மின்னஞ்சல் : parumugam72@gmail.com

## முன்னுரை

மதுரையைப் பார்க்காதவன் மாபாவி. மதுரையைக் காணாத கண்கள் புண்கள். ‘மது’ என்றாலே ‘தேன்’ என்று பொருள். தேன்கூடுகள் நிறைந்த சோலைகள் பகுதி ‘தேன்வனம்’ (Madhu bit) என்றழைக்கப்பட்டது. இந்தத் தேன் அடிப்படையில் தோன்றிய ஊர்கள்தான் பின்னாளில் மதுரை என்று அழைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் தான் தமிழகத்தில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் மதுரை என்ற ஊர் பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன. அம்மதுரைகளை ஒவ்வொன்றாக ஆய்ந்து வெளிக்கொணர்வது தான் இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தென்மதுரை

தமிழகத்தின் தென்பகுதியில் இது அமைந்திருந்ததால் தென்மதுரை எனப்பட்டது. இங்குத்தான் முதற் சங்கம் இருந்தது. இம்மதுரை தான் முதன்முதலில் தோன்றிய மதுரை ஆகும். இம்மதுரை பஃறுளி ஆற்றங்கரையில் தோன்றியது. தமிழின் இரண்டாம் காப்பியம் என்று அழைக்கப்படுவது மணிமேகலையாகும். இது பெண்ணின் பெருமை பேசும் ஒரு ஒப்பற்ற காப்பியம் ஆகும். இது தென்மதுரையை “தென்தமிழ் மதுரை”[1] என்று கூறுகிறது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமோ இத்தென்மதுரையை “தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை”[2] என்று புகழ்கிறது. இத்தென்மதுரையின் வளத்தை ஒரு நாட்டுப்புறப் பாடலும் பின்வருமாறு கூறுகிறது.

“கட்டு கலங்காணும் கதிர் உழக்கு நெல் காணும்
அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்

காளை கட்டிப் போரடித்து மாளாது செந்நெல் என்று

ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை”[3]

இத்தகைய சிறப்புமிக்க தென்மதுரை கடல்கோள்களால் அழிந்துவிட்டது. இதை,

“பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள”[4]

என்ற சிலப்பதிகார வரிகளால் அறியலாம்.

**பழமதுரை**

தென்மதுரை கடலால் அழிவுற்றதும், தற்போதுள்ள மதுரைக்குக் கிழக்கே பழமதுரை ஏற்படுத்தப்பட்டது. இது கடல்கொள்ள வந்த மதுரை என்றும் சொல்லப்படுகிறது. இம்மதுரையில் “பழமதுரை மேடென்ற ஓரிடமும், பழமதுரை முனியென்ற ஒரு முனியின் கோயிலும் அங்கேயுண்டு”[5] என்று திருவிளையாடற் புராணமும் கூறுகிறது. எனவே, மதுரையின் கிழக்கே அமைந்துள்ள பாண்டி முனிகோயில் பகுதியாகவோ, மதகு அணைப்பகுதியில் அமைந்துள்ள கல் மேட்டுப் பகுதியாகவோ அல்லது தொல்பொருள் ஆவணக்கிடங்காகத் திகழ்கின்ற கீழடிப்பகுதியாகவோ அல்லது மகாபாரதத்தில் பேசப்படுகிற மணலூர் பகுதியாகவோ இருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது. பழைய மதுரை என்பதால் தான் இது பழமதுரை என்று சொல்லப்படுகின்றது. இவ்வூரைத் தான் மீனாட்சி பிள்ளைத் தமிழ்,

“தமிழோடு பிறந்து பழ மதுரையில்

வளர்ந்த கொடி”[6] என்கிறது.

**வடமதுரை**

இவ்வூர் தற்போதுள்ள புகழ்பெற்ற மதுரையாகும். இம்மதுரை வடக்கே அமைந்துள்ளதால் வடமதுரை என்று பெயர் பெற்றுள்ளது. இது “சத்த முத்தித் தலங்களுள் ஒன்று”[7]. இம்மதுரையில் பிறக்கின்ற அனைத்து உயிர்களுக்கும் முக்தி உண்டு என்பார்கள். ‘சத்த’ என்றால் ‘ஏழு’ என்று பொருள். அதாவது “அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை”[8] என்ற ஏழு ஊர்கள் தான் சத்த முத்தித்தலங்கள் ஆகும். இம்மதுரையில் தான் கடைச்சங்கம் இருந்தது. இம்மதுரை வைகை ஆற்றங்கரையில் தோற்றுவிக்கப்பட்டது. இம்மதுரையைத்தான் கூடல், கூடல் மாநகர், நான்மாடக்கூடல் என்றெல்லாம் அழைப்பார். “உறையூர்(கோழி), காசி(வாரணாசி), காஞ்சி(கச்சி), அயோத்தி(காகேதம், கோகலம்), மதிலை(சனகை, விதேகை), புகார்(காகந்தி, காவிரிப்பூம்பட்டினம்), அலந்தி நகர்(உஞ்சை),

ஈழம்(சிங்களம்), வினதை நகர்(கோலம்) ஆகிய ஊர்கள் இம்மதுரையைப் போல் அமைந்துள்ள ஊர்களாகும்”[9]. பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சின்னமனூர்ச் செப்பேடு இம்மதுரையில்தான் கடைச்சங்கம் இருந்தது என்கிறது. இதை,

“மகாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம்
வைத்தும்”[10]

என்ற வரிகளால் அறியலாம். இறையனார் களவியல் உரை கூறும் மதுரையும் இதுதான். இம்மதுரையில்தான் மதுரை கனக்காயர், நக்கீரர், மருதன் இளநாகனார் என்ற பல சங்கப்புலவர்கள் இருந்தனர். இம்மதுரையில்தான் நக்கீரருக்குக் கோயில் ஒன்று உள்ளது. இதே மதுரையில் தான் “கி.பி. 470இல் ‘உச்சிரணந்தி’ என்ற சமண முனிவர் ஒரு தமிழ்ச் சங்கமும் ஏற்படுத்தினார்”[11] எனலாம்.

இம்மதுரை மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் முடிகொண்ட சோழபுரம் என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது. இதை,

“வண்டறைதார் வழுதியரைக்
கொண்ட பாண்டி மண்டலத்தை
சோழப் பாண்டி மண்டலமென்
றேழுபாரும் சொலநிறுத்தி
மல்லல்வையை மதுரையையும்
மதுரையென்று பேரொழித்துத்
தொல்லைமுடித் தலைகொண்ட
சோழபுரம் என்றருளி
தாடொழுத மண்டபத்தில்
சேரபாண்டியர் தம்பிரானென்று, பேரெழுதி”[12]

என்ற அவனது மெய்க்கீர்த்தியால் அறியலாம்.

இம்மதுரையில்தான் “14.09.1901இல் பாண்டித்துரைத்தேவர்(பாலவநத்தம் சமீன்தார் உக்கிரபாண்டியன்) மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவினார்.”[13] அச்சங்கம் இன்றும் இன்னொரு நிலவாய் நித்தமும் இருந்து வருகிறது. இதேபோல் பின்னாளில் பல வடமதுரைகள் உண்டாகியிருக்கின்றன. அவை போலச் செய்தல் முறையிலோ, தேன் அடிப்படையிலோ, வெற்றியின் குறியீடாகவோ, விழாவின் அடிப்படையிலோ அல்லது இங்கிருந்து பிடிமண் எடுத்துச்சென்றோ உருவாகி இருக்கலாம். அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

**வேடசந்தூர் வடமதுரை(திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல்லுக்கு வடக்கே 18 கிலோமீட்டர் தொலைவில் வேடசந்தூர் அருகே வடமதுரை என்ற பெயரில் ஊர் உள்ளது. இவ்வூர் ஒன்றியத்தின் தலைநகராக விளங்கி வருகிறது. இங்குப் புகைவண்டி நிலையம் உண்டு. இங்குள்ள சௌந்தரராசப்பெருமாள் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில் ஆகும். இங்கு ஆடி பௌர்ணமியில் ஆண்டுதோறும் தேர்த்திருவிழா நடைபெறுவது வழக்கம். கொரோனா நோய் பாதிப்பின் போது, 'பசியில்லா வடமதுரை' என்று பெயர் வாங்கிய ஊராகும். வளமையின் குறியீடாக வடக்குத் திசையில் உண்டானதால் வடமதுரை என்று பெயர் உண்டாகியிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

**ஊத்துக்கோட்டை வடமதுரை**

இம்மதுரை திருவள்ளூர் மாவட்டத்தில், ஊத்துக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. இங்குப் புகழ்பெற்ற செல்லியம்மன் கோயில் ஒன்று உள்ளது. இவ்வூரைப் பெரியபாளையம் என்றும் பெயரிட்டு அழைத்துவருவதை ஆய்வாளர் நேரில் காணமுடிந்தது.

**கோயமுத்தூர் கே.வடமதுரை**

இம்மதுரை கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள ஸ்ரீலிங்கம்மாள் கோயில் புகழ்பெற்று விளங்கியிருக்கிறது.

**சென்னை வடமதுரை**

சென்னையில் வடமதுரை என்ற ஊர் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**பாராசூர் மதுரை**

இம்மதுரை செய்யாறிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் பாராசூர் அருகே அமைந்துள்ளது. இவ்வூர் பாராசூர் அருகே அமைந்துள்ளதால் பாராசூர் மதுரை என்றே பெயர் வழங்கி வருகிறது எனலாம். பூவின் தேன் அல்லது மதுவின் அடிப்படையில் தோன்றிய இவ்வூர் பாண்டியர் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு செய்திகள் பின்வருமாறு, "வீரபாண்டியன் 4ஆம் ஆட்சியாண்டில் மதுரையாகிய திருவம்பலப் பெருமாநல்லூர் என்ற ஊர். திருவோத்தூர் விஸ்வேஸ்வர நாயனார் பூசைக்கும் அமுது படிக்கும் தபசிகளின் போஜனத்துக்காகவும் தானமாக

விடப்படுகிறது. அத்திப்பற்று அழிவடை தாங்கி நாட்டவர் இம்முடிவைக் கல்வெட்டாகப் பொறித்து வைத்தனர்".[14]

நல்லூர் என்று மின்னொட்டுகளோடு முடியும் பெரும்பான்மையான ஊர்கள் இடைக்காலத்தில் தோன்றியது எனலாம். இடைக்காலம் சோழர்களுடைய காலம் ஆகும். எனவே பாராசூர் மதுரை சோழர் காலத்தில் திருவம்பலப் பெருமாநல்லூர் என்று பெயர் பெற்றிருக்கலாம். இவ்வூரில் ஒரு பெரிய திருவிழா நடைபெற்றிருக்க வேண்டும். இவ்வூர் மக்களின் வரி அரசுக்குப் போய்ச் சேர்ந்திருக்காது. மாறாக அத்திருவிழாவின் செலவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். வீரபாண்டியன் காலத்தில் அவன் வெற்றியின் குறியீடாகவோ, விழாவின் குறியீடாகவோ மதுரையாகிய அடைமொழி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம். இவ்வாறு பல இடங்களில் ஏற்படுத்துவது தமிழ் மன்னர்களின் மரபாக நிகழ்ந்துள்ளது.

**இந்தோனேசிய மதுரை**

உலகத்தில் மகிழ்ச்சியான நாடு என்றால், அது இந்தோனேசிய நாடு என்று 'இம்போஸ்' என்ற ஆய்வு தெரிவிக்கிறது. உலகிலேயே அதிகமாக இந்நாட்டில் தான் நிலநடுக்கமும் ஏற்படுமாம். இங்கு நிறையத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்மொழியை நன்கு ஒத்துழைப்புகொடுத்துவரும் நாடும் இந்தோனேசியா. இந்த இந்தோனேசியாவில் "மதுரை' என்ற பெயரில் ஒரு தீவும், ஒரு கோயிலும் இருக்கிறது"[15] என்று அறியப்படுகிறது.

**மானாமதுரை**

இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், வைகையாற்றின் கரைகளின் இரு பக்கங்களிலும் அமைந்துள்ளது. மதுரையில் நடைபெறுவது போலவே ஆற்றில் வீரஅழகர் இறங்கும் நிகழ்ச்சியும், மீனாட்சி திருக்கல்யாணமும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அப்போது நூற்றுக்கணக்கான ஊர்களிலிருந்து மக்கள் வந்திருந்து மண்டகப்படிகள் அமைத்து ஆண்டுதோறும் விழா கொண்டாடுவர். இவ்வூரில்தான் வெள்ளையர்களுக்கும், வேலு நாச்சியாருக்கும் இடையே புகழ்பெற்ற போர் நடைபெற்றது. நான்கு திசைகளிலிருந்து வரும் புகைவண்டிகளின் சந்திப்பாக இவ்வூர் விளங்கி வருகிறது. "14ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை மானவீரன் என்னும் பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். அவனால் இந்த ஊர் அமைக்கப் பெற்றதால், 'மானவீரன் மதுரை' என்று விளங்கியது. அனுமன் சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக இராமபிரான் அனுமனுக்கு இந்த ஊரில் சேனாதிபதி பதவி

கொடுத்தார் என்றும், அதனால் இந்த ஊர் வானர வீரர் மதுரை என்று பெயர் பெற்று நாளடைவில் மானாமதுரை என மருவி வழங்குகிறது ”[16] என்பது புராண வரலாறு.

“முசுலீம்கள், மதுரைக்கோயிலை சேதப்படுத்தும்போது, மீனாட்சி மற்றும் சுந்தரேசுவரரின் செப்புத்திருமேனிகள்(உற்சவர் திருமேனிகள்) மானாமதுரைப் பகுதியில் இருந்த முசுமுசுக்கை(குரங்குகள் வாழ்ந்த பகுதி) காட்டில் மறைத்து வைத்துச் சேதுபதி மகாராசாவின் உதவியால் பூசை செய்து காப்பாற்றப்பட்டன”[17] என்று சீதாள நூல் கூறுகிறது. எனவே மானாமதுரையிலுள்ள சுந்தரபாண்டியன் குறடு, லேனா தமிழ்வாணன் கருத்து, மதுரை போல் மானாமதுரையில் நடைபெற்று வரும் சித்திரைத் திருவிழா, மீனாட்சியம்மன் கோயில் சீதாள நூலில் உற்று நோக்கும்போது தற்போதைய பெரிய வடமதுரைக்கும், மானாமதுரைக்கும் நெருங்கிய தொடர்பு தெரியவருகிறது. அதனால்தான் “மானா“ என்ற சொல்லின் பின்னொட்டாக ‘மதுரை’ என்ற சொல் உருவாகியிருக்கிறது.

### கீழ்மதுரை

இவ்வூர் மதுரை நகரின் கிழக்கே, சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. புகைவண்டி நிறுத்தமும் இங்கு உண்டு. தமிழகத்தில் குறிப்பாகப் பாண்டியர் கால ஊர்கள் எதிர்ப்பதங்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் மேலமாத்தூர் X கீழமாத்தூர், மேலூர் X கீழூர், மேலடி X கீழடி, மேல உரப்பனூர் X கீழ உரப்பனூர், பெருந்தேனூர் X சிறுந்தேனூர், சிறுகுடி X பெருங்குடி, மேலவளவு X கீழ வளவு என்ற ஊர்கள் நமக்குக் கிடைக்கின்றன. இதேபோல் மேல்மதுரை X கீழ்மதுரை என்ற ஊர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

### நெடுமதுரை

மதுரை என்ற ஊர், மதுரை மாவட்டம், தெற்கு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. இங்கு 599 குடும்பங்கள் வசிக்கின்றன. திருப்பரங்குன்றம் அருகே இவ்வூர் அமைந்துள்ளது. ‘நெடு’ என்றால் ‘நீளமாக’ என்பது பொருளாகும். நீளமான ஊர் என்பதால் நெடுமதுரை என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

### கும்பிடு மதுரை

இம்மதுரை ‘இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே அமைந்துள்ளது’[18] கும்பிட்டு வரவேற்பது என்பது தமிழருடைய பண்பாட்டு கலாச்சாரங்களுள்

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வருவோரை இவ்வூர் மக்கள் கும்பிட்டு வரவேற்றிருக்கலாம். அதனால்தான் 'கும்பிடு மதுரை' என்ற பெயர் இவ்வூருக்கு உருவாகியிருக்கிறது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே அமைந்துள்ள 'சித்தாலை' என்ற கிராமத்தில் ஒருவருக்கு 'கும்பிடுறேன் சாமி' என்றே பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் திருமங்கலம் வட்டத்தில் அமைந்துள்ள 'மொச்சிகுளம்' என்ற ஊரில் ஒருவருக்கு 'வணக்கம்' என்றே பெயர் வைக்கப்பட்டிருப்பதையும் ஆய்வாளர் நேரடியாகக் காணமுடிந்தது. இந்நிகழ்வை உற்றுநோக்கி அறியும்போது கும்பிடுதல் என்ற அடிப்படையில் பின்னொட்டாக மதுரை என்ற ஊர்ப்பெயர் உண்டாகியிருக்கிறது என்றே முடிவுக்கு வரலாம்.

**முடிவுரை**

- தமிழர் நாகரீகம் கடற்கரைப் பகுதியிலும், ஆற்றங்கரைப் பகுதியிலும் தோன்றியிருக்கின்றன.
- ஆதி பழமதுரை பஃறுளி ஆற்றங்கரையில் இருந்தது. அது கடல்கோளால் அழிவுற்றபின் மணலூம், கீழடி, பாண்டி கோயில், கல்மேடு, நாகமலை பழைய கோட்டைப் பகுதி ஆகிய பகுதிகளில் பல பழமதுரைகள் தோன்றியிருக்க வேண்டும். இவை அழிவுற்ற பின் தற்போதுள்ள மதுரை உண்டாகியிருக்க வேண்டும்.
- போர் காலங்களில் வெற்றி பெற்ற மன்னன், தான் வெற்றி பெற்றதன் குறியீடாக அவனது நாட்டை வெற்றி கொண்ட ஊருக்கு வைக்கும் மரபும் இருந்துள்ளது.
- தலைநகரங்கள் காலந்தோறும் மாறியதற்குப் பூமியின் கீழே அமைந்திருந்த நீரோட்டமும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். அதனால்தான் பாண்டியன் வரலாற்றில் 90 பாண்டிய அரசர்களும் 300 நகரங்களும் நமக்குக் கிடைக்கின்றன. எனவேதான், நீரின்றி அமையாது உலகு என்ற வாசகம் பிறந்தது போலும்.

**அடிக்குறிப்புகள்**

1. தேவிரா (தொகு.ஆ), தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், 2007, பக் - 29.
2. மேலது. பக் - 29.
3. நாட்டுப்பாடல் – பாண்டியர் காலம்.

4. தேவிரா (தொகு.ஆ), தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், 2007, பக் - 29.
5. அபிதான சிந்தாமணி, பக் – 1281.
6. மாணிக்கவாசகன், ஞா. (உரை.ஆ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், 2008, பக் - 5.
7. அபிதான சிந்தாமணி, பக் – 1675.
8. மேலது, பக் - 1616.
9. செல்வராசு, வீ.ஜெ. தமிழ் சொற்றொடர் அகராதி (தெசாரசு), மே, 2003, பக் – 404.
10. தேவிரா, (தொகு. ஆ) தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், பக் - 30.
11. மேலது, பக் – 32.
12. பொன்னுச்சாமி பிள்ளை, வ.குலோத்துங்க மூவர், அக்,1954, பக் - 125.
13. தேவிரா, (தொகு. ஆ) தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், பக் - 32.
14. கிருஷ்ணமூர்த்தி. ச., (செய்யாறு) கல்வெட்டுகளில் ஊரும் பேரும், மே, 2001, பக் - 62.
15. சிதம்பரம்.வி.என்., அங்கயற்கன்னியின் அற்புதங்கள்.
16. தமிழ்வாணன், லேனா, (பதி.ஆ) தமிழக ஊர்களின் பெயர்க் காரணங்களும், சிறப்புகளும், 1988, பாகம் – 2, பக் - 341.
17. மீனாட்சியம்மன் கோயில் சீதாள நூல்.
18. தினமலர், 23.01.2020, பக் - 3.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712